# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044361

1. District மாவட்டம்: Coimbatore   PS: V+AC காவல்நிலையம்   Year: 2022 ஆண்டு   FIR No.: 07/2022/AC/CB மு.த.அ. எண்   Date: 23/04/2022 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act   Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 1988 as amended by PC (Amendment)   Sections பிரிவுகள்: 7, 12
(iii) Act சட்டம்: Act, 2018.   Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல்: 23.04.2022   Date to நாள் வரை: 23.04.2022
Time Period நேர அளவு   Time from நேரம் முதல்: 10.45 hrs   Time to நேரம் வரை: 16.00 hrs
(b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 23.04.2022   Time நேரம்: 16.40 hrs
(c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: GD. Vol. I   Time நேரம்:

4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: கதவு எண்-17, கிருஷ்ணா நகர், சௌரிபாளையம் அருகில் சுமார் 10 அடி, சுமார் 13. கி.மீ. கிழக்கு
Beat Number: முறைக் காவல் எண்   (b) Address: முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்: —   District: மாவட்டம்: —

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: திருமதி. V. சாந்தாமணி   (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்: வே. வேலுச்சாமி
(c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு: —   (d) Nationality நாட்டினம்: இந்தியன்   (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: —
Date of Issue: வழங்கப்பட்ட நாள்   Place of Issue: வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில்: துணை ஆய்வுக்குழு அலுவலர், கோவை.   (g) Address முகவரி: மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
① திரு. K. உமாசக்தி, இணைபோக்குவரத்து ஆணையர், கோவை சரகம், கோ[illegible]
② திரு. M. செல்வராஜ், ஓய்வுபெற்ற அலுவலக உதவியாளர், கதவு எண்-17, கிருஷ்[illegible] நகர், ரேஷன் கடை எதிரில், சௌரிபாளையம், கோவை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/4/2022

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.04.2022

Name பெயர் M.P. திவ்யா
Rank நிலை .................... No. எண் ..........
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
[illegible] பிரிவு,
கோவை.

* GCP-340-34(Type-2) 90,000 Cps -21 3 18(HCL-12) p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

**Continuation of the FIR in Coimbatore V&AC Cr.No.07/2022/AC/CB u/s. 7, 12 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018**

இன்று 23.04.2022-ம் தேதி 16.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் M.P.திவ்யா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.V.சாந்தாமணி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். Cr.No.07/2020/AC/CB u/s. 7, 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின் வருமாறு அனுப்புனர் V.சாந்தாமணி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்-18. பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர்-30. ந.க.எண்.305/2022/ஐ1 நாள் 23.04.2022 அம்மையீர் பொருள் திடீர் தணிக்கை - கோவை மாவட்டம்- இணைப் போக்குவரத்து ஆணையர் அவர்களின் வாகனத்தை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல் நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக இன்று 23.04.2022-ம் தேதி கோவை சரகம் இணை போக்குவரத்து ஆணையர் அவர்கள் தனது அதிகார எல்லைக்குட்பட்ட கோவை, நீலகிரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் வாகன தணிக்கை சோதனை சாவடிகள் ஆகியவற்றில் இருந்து மாத மாதம் மாமூல் தொகையை, ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.செல்வராஜ் என்பவர் மூலம் வசூல் செய்தும், அந்த பணத்தை அவரது வீடான க.எண்.17, கிருஷ்ணா நகர், ரேசன் கடை எதிர்புறம், சௌரிபாளையத்தில் அமைந்துள்ள வீட்டிற்கு சென்று மேற்படி வசூல் செய்யப்பட்ட மாமூல் பணத்தை கோவை, இணை போக்குவரத்து ஆணையர் அவர்களால் பெற்றுக்கொண்டு செல்வதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில், கோவை துணை ஆய்வுக் குழு அலுவலர் திருமதி V.சாந்தமணி, கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

பிரிவு, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினர்கள் ஆகியோர்களுடன் இணைந்து செய்த திடீர் தணிக்கை விபரம் பின்வருமாறு:

அதனைதொடர்ந்து இன்று 23.04.2022-ம்தேதி காலை சுமார் 10.45 மணிக்கு மேற்படி க.எண்.17, கிருஷ்ணா நகர், ரேசன் கடை எதிர்புறம், சௌரிபாளையத்தில் அமைந்துள்ள திரு.செல்வராஜ் என்பவரது வீட்டிற்கு கோவை போக்குவரத்து இணை ஆணையர் திரு.K.உமாசக்தி அவர்கள் தான் பயன்படுத்தி வரும் தன்னுடைய சொந்த Santro Zing கார் TN34 F 3747 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தில் செல்வதாக கிடைத்த தகவலின்பேரில் அவரை பின் தொடர்ந்து செல்லப்பட்டது. அப்போது கோவை இணை போக்குவரத்து ஆணையர் மேற்படி செல்வராஜ் வீட்டிற்குள் கருப்பு கலர் லெதர் பேக்குடன் உள்ளே சென்றுவிட்டு சுமார் 10 நிமிடம் கழித்து மேற்படி கருப்பு கலர் லெதர் பேக்குடன் வெளியே வந்து அவரது காரில் ஏறிக்கொண்டு சென்றவரை செல்வராஜ் என்பவரின் வீட்டிலிருந்து சுமார் 10 அடி தூரத்தில் துணை ஆய்வுக்குழு அலுவலர், ஊ.த.க கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினர்களுடன் சேர்ந்து மேற்படி காரை சுமார் 11.00 மணிக்கு தடுத்து நிறுத்தப்பட்டது. அப்போது டிரைவர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தன்பெயர் K.உமாசக்தி என்றும், கோவை இணை போக்குவரத்து ஆணையர் என்றும் தெரிவித்தார். மேற்படி நபரிடம் துணை ஆய்வுக்கு அலுவலர், ஊ.த.க பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினர்களை அறிமுகம் செய்து வைத்து திடீர்தணிக்கை வந்த விபரத்தை தெரிவிக்கப்பட்டது. மேலும், அவரை விசாரிக்க தான் ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.செல்வராஜ் என்பவரிடமிருந்து மாமூலாக வசூல் செய்த பணத்தை பெற்று தனது காரில் வைத்துள்ளதாகவும், தற்போது அரியலூரர் செல்ல இருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரது காரை சோதனை செய்தபோது அவரது காரில் இருந்த பேக்குகளில் கத்தைகத்தையாக பணம் இருந்தது. மேலும் மேற்படி இடமானது பொது இடமாக இருந்ததாலும், பொதுமக்கள் கூடியதாலும் இணை போக்குவரத்து ஆணையர் திரு.உமாசக்தி அவர்கள் துணை ஆய்வுக்குழு அலுவலர்

அவர்களிடம் தன்னை தனது அலுவலகத்தில் வைத்து சோதனை செய்ய வேண்டுகோள் விடுத்தார். அதனை தொடர்ந்து காரின் அருகில் வந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் M.செல்வராஜ் என்றும், தான் கோவை தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றதாக தெரிவித்தார். மேலும் அவரை விசாரிக்க கோவை இணை போக்குவரத்து ஆணையர் திரு.உமா சக்தி அவர்களை தனக்கு ஏற்கனவே தெரியும் என்றும், அவர் கேட்டுக்கொண்டதின் பேரில் மாத மாதம் அதிகாரிகள் கொடுக்கும் பணத்தை வசூல் செய்து தான் தனது வீட்டில் வைப்பேன் என்றும், அதை திரு.உமா சக்தி அவர்கள் வந்து வாங்கி செல்வது வழக்கம் என்று தெரிவித்தார். மேலும் மேற்படி இடமானது பொது இடமாக இருந்ததாலும், பொது மக்கள் கூடியதாலும் இணை போக்குவரத்து ஆணையர் திரு.உமாசக்தி அவர்களின் வேண்டுகோளின் படி அவரது காரில் திரு.உமா சக்தி மற்றும் திரு.செல்வராஜ் ஆகியோரை அழைத்துக்கொண்டு, டாக்டர் பாலசுந்தரம் ரோட்டில் அமைந்துள்ள அவரது அலுவலகமான இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு சுமார் 11.30 மணிக்கு வரப்பட்டது. அதன் பின்னர் அவரது காரை சோதனை செய்தபோது அவரது காரின் பின்புற இருக்கையில் வைக்கப்பட்டிருந்த கருப்பு நிற பேக், புளூ நிற பேக் மற்றும் ஊதா நிற பேக் ஆகிய மூன்று பேக்குகளையும் அவரது அலுவலக அறைக்கு எடுத்து வரப்பட்டது. மேற்படி பேக்குகளை பற்றி அவரிடம் கேட்க அந்த மூன்று பேக்குகளும் தன்னுடையது தான் என்று சொன்னதின் பேரில் மேற்படி பேக்குளை திறந்து காண்பிக்க சொல்ல அவர் முதலில் கருப்பு நிற பேக்கில் பிரவுன் கலர் கவருக்குள் மூன்று கவர்கள் இருந்தது. அதிலிருந்த 1).வெள்ளை நிற கவரில் RP Hero என்று அச்சடிக்கப்பட்ட கவரில் இருந்த பணத்தை எண்ணி பார்க்க அதில் 2000 X 111 = 2,22,000/-, 500 X 26 = 13,000/- ஆக மொத்தம் ரூ.2,35,000/- பணம் இருந்தது. 2) பிரவுண் நிற கவரில் இருந்த பணத்தை எண்ணி பார்க்க அதில் 500 X 100 ஆக 5 கத்தைகள் இருந்தது. அதில் ஆக மொத்தம் 500 X 500 = 2,50,000/- இருந்தது. 3) பிரவுன் நிற கவரில் The New India Assurance Co. Ltd என்று அச்சடிக்கபட்ட கவரில் இருந்த பணத்தை பார்க்க அதில் 2000 ரூபாய் ஒரு

கத்தையாகவும் 500 ரூபாய் நான்கு கத்தைகளாகவும் மொத்தம் 5 கத்தைகள் இருந்தது. அதை எண்ணி பார்க்க 2000 X 25 = 50,000/-, 500 X 400 = 2,00,000/- ஆக மொத்தம் ரூ.2,50,000/- பணம் இருந்தது. மேற்படி மூன்று கவர்களில் இருந்த பணம் ரூபாய் 7,35,000/- ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி பிரவுன் நிற கவரும் அதனுள் இருந்த மேற்படி மூன்று கவர்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த பேக்கில் I.G. Group of companies என்ற அச்சிடப்பட்ட Blue and White plastic Cover-ஐ பார்வையிட்டபோது அதில் 500 ரூபாய் நோட்டுகள் 40 கத்தைகள் இருந்தது. அதை எண்ணி பார்க்க மொத்தம் 500 x 4000 = 20,00,000/- இருந்தது. மேற்படி கவரில் இருந்த பணம் ரூபாய் ரூ.20,00,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் இருந்த I.G. Group of companies என்ற அச்சிடப்பட்ட Blue and White plastic Cover-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் புளூ நிற பேக்கை பார்வையிட்டதில் அதில் அவர் உடுத்தும் துணிகள் வைக்கப்பட்டிருந்தது. அந்த துணிக்கு அடியில் 500 ரூபாய் நோட்டுக்கள் கொண்ட இரண்டு கத்தைகள் இருந்தது. அதை எண்ணி பார்க்க மொத்தம் 500 X 200 = ரூ.1,00,000/- இருந்தது. மேற்படி பணம் ரூபாய் 1,00,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.28,35,000/-ஆகும். மேலும் திரு.உமா சக்தி அவர்களிடம் வேறு பணம் பற்றி விசாரிக்க அவர் தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து அவரது மணிபர்சை எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில் ரூ.10,100/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதன் பேரில் அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த பர்சினுள் ஒரு வெள்ளை நிற துண்டு சீட்டு இருந்தது. அதில் தலைப்பில் JTC PDL என்றும் M PDL என்றும் எழுதப்பட்டு அதில் பண விபரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை பற்றி விசாரிக்க, தனக்கு கீழ் உள்ள RTO அலுவலகத்தில் இருந்து வசூல் செய்யப்பட்ட மாமூல் பணத்தின் விபரம் என்று தெரிவித்தார். மேற்படி துண்டு சீட்டை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கை நடவடிக்கையின் போது தகவல் தெரிவித்ததின் பேரில் கோவை தெற்கு வட்டாரப்போக்குவரத்து

அலுவலர் திரு.S.பாலமுருகன் அவர்கள் சுமார் 14.30 மணிக்கு இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு வந்து நடவடிக்கையில் கலந்துகொண்டார். மேலும் திரு.உமா சக்தி என்பவரை விசாரிக்க தான் சேலம் மாவட்டம் சங்ககிரி தாலுக்காவில், திருச்செங்கோடு ரோட்டில் அமைந்துள்ள கதவு எண் 1/17, 13 A2 எபினேசர் காலனியில் தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், தான் கடந்த 04.08.1993 அன்று மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2 பணிக்கு சென்னை மந்தைவெளி பகுதி அலுவலகத்தில் பணியில் சேர்ந்து படிப்படியாக வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் துணை போக்குவரத்து ஆணையராகவும் பதவி உயர்வு பெற்றும் தற்போது 20.12.2019 ஆம் தேதி முதல் இணைப் போக்குவரத்து ஆணையராக பதவி உயர்வு பெற்று கோவை மாவட்டம், திருப்பூர் மாவட்டம் மற்றும் நீலகிரி மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய கோவை சரகத்தின் இணை ஆணையராக பணிபுரிந்து வருவதாகவும் தினமும் தனது சொந்த ஊரான சங்ககிரிக்கு சென்று வருவதில் சிரமம் இருந்து வருவதாலும், வேலை பளு காரணமாகவும் தான் கோயம்புத்தூர் காந்திபுரம் 1-வது கிராஸ்கட் ரோடு பகுதியில் உள்ள விஜய் மேன்ஷனில் ரூம் எடுத்து தங்கி வருவதாகவும் தெரிவித்தார். மேலும் கோவை தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.செல்வராஜ் என்பவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் பழக்கமானவர் என்றும், மேலும் தான் கேட்டுக்கொண்டதின் பேரில் கடந்த 5 மாதமாக கோவை, நீலகிரி, திருப்பூர் போக்குவரத்து வட்டார அலுவலகங்களில் இருந்து தனக்கும் தனது மேல் அதிகாரிகளுக்காகவும் மாதம் மாதம் மாமூல் வசூல் செய்து கொண்டுவந்து கொடுக்கும் பணத்தை திரு.செல்வராஜ் வாங்கி அவரது வீட்டில் வைப்பார் என்றும் தான் அவாது வீட்டிற்கு சென்று வசூல் செய்த பணத்தை வாங்கி செல்வது வழக்கம் என்றும், அதே போன்று நேற்று 22.04.2022-ம் தேதி திரு.செல்வராஜ் வசூல் செய்துவைத்திருந்த பணம் ரூ.28,35,000/-ஐ வாங்க இன்று 23.04.2022-ம் தேதி வருவதாக அவரிடம் தெரிவித்ததாகவும், இன்று காலை சுமார் 07.50 மணியளவில் திரு.செல்வராஜ் Whats app-ன் மூலம் தனது Whats app-க்கு வசூல் செய்த பணத்தின் விபரங்களை ஒரு வெள்ளை நிற

பேப்பரில் எழுதி Photo எடுத்து தனக்கு அனுப்பிவைத்ததாகவும், இன்று காலை சுமார் 10.25 மணிக்கு தான் தனது தொலைபேசி எண் 99941-07429 -ல் இருந்து திரு.செல்வராஜ் செல்போன் எண் 6381773783-க்கு அழைத்து தான் வீட்டிற்கு வருவதாக தெரிவித்து பணம் ரெடியா என்று கேட்டதாகவும், அதற்கு அவரும் பணம் ரெடியாக இருப்பதாக தெரிவித்தாகவும், அதன் படி இன்று 23.04.2022 காலை சுமார் 11.00 மணிக்கு Santro Zing TN 34 F 3747 என்ற பதிவு எண் கொண்ட காரில் அவரது வீடு அமைந்துள்ள சௌரிபாளையம், கிருஷ்ணா நகருக்கு சென்று திரு.செல்வராஜ் வீட்டில் இருந்து பணம் ரூ.27,35,000/-ஐ பெற்றுக்கொண்டு தான் காரில் கிளம்பும்போது சுமார் 10 அடி தூரத்தில் தாங்கள் தனது காரை நிறுத்தி சோதனை செய்ததாகவும் தெரிவித்தார். மேலும் திரு.உமா சக்தி அவர்கள் வைத்திருந்த One Plus A6000 Cell Phone-ஐ வாங்கி அவரது Whats app Message-களை பார்வையிட்டபோது. அதில் இன்று 23.04.2022-ம் தேதி காலை சுமார் 07.53 மணியளவில் Selvaraj RTD Oa Cbe South Other No என்று பெயரில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி எண். 638177378- க்குண்டான Whats app message-ஐ திறந்து பார்க்க அதில் Today என்பதற்கு கீழ் வெள்ளைத்தாளில் குறிப்பு எழுதப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்ட Photo திரு.செல்வராஜ் Whats app-ல் இருந்து திரு.உமா சக்தி Whats app-கணக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மேற்படி Whats app message-ஐ திரு.உமா சக்தி அவரிடம் காண்பித்து விசாரிக்க, அவர் இன்று காலை 07.53 மணிக்கு தனது Whats app-க்கு திரு.செல்வராஜ் Whats app-கணக்கில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். மேற்படி Whats app message-ஐ திரு.உமா சக்தி என்பவரின் செல்போனில் open செய்து Screen Shot எடுத்து printout எடுக்கப்பட்டு அதில் திரு.உமா சக்தி மற்றும் தெற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலர் திரு.பாலமுருகன் ஆகியோர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. மேலும் திரு.உமா சக்தி அவர்கள் வைத்திருந்த One Plus A6000 Cell Phone-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.செல்வராஜ் என்பவரை விசாரிக்க, அவர் தன் மீது ஏற்கனவே கோவை

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்டு தற்போது வரை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதாகவும், கடந்த 28.09.2013-ம் தேதி முதல் பணி ஓய்வு பெறவில்லை என்றும், மேற்படி இணை போக்குவரத்து ஆணையர் திரு.உமாசக்தி அவர்களை தனக்கு தெரியும் என்றும், மேலும் அவர் கேட்டுக்கொண்டதின் பேரில் கடந்த 5 மாதமாக கோவை, நீலகிரி, திருப்பூர் போக்குவரத்து வட்டார அலுவலகங்களில் இருந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் தங்களுக்கு நம்பிக்கையான புரோக்கர் மூலம் கொடுத்து அனுப்பும் மாமுல் பணத்தை தான் வாங்கி தனது வீட்டில் வைப்பேன் என்றும், திரு.உமா சக்தி அவர்கள் தனது வீட்டிற்கு வந்து வசூல் செய்த பணத்தை ஊருக்கு செல்லும் போது வாங்கி செல்வது வழக்கம் என்றும், அதே போன்று நேற்று 22.04.2022-ம் தேதி வட்டாரப்போக்குவரத்து (மத்தியம்) அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.கோகுல், வட்டாரப்போக்குவாத்து (தெற்கு) அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.சண்முகம், சூலூர் MVI அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.சண்முகம், ஊட்டி வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து புரோக்கர் சாய்மெர்சி, மேட்டுப்பாளையம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.ராஜன், திருப்பூர் வடக்கு அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.சதீஷ், திருப்பூர் தெற்கு அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.ராமசாமி, தாராபுரம் அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.பாபு, உடுமலைப்பேட்டை அலுவலகத்தில் இருந்து Bai , பொள்ளாச்சி அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.ராஜேஷ், கூடலூர் அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.ராஜன், அவினாசி அலுவலகத்தில் இருந்து புரோக்கர் காளை சரவணன், காங்கேயம் அலுவலகத்தில் இருந்து புரோக்கர் திரு.தேவா ஆகியோர்கள் கொண்டு வந்து கொடுத்த பணம் ரூ.27,35,000/-ஐ தான் வாங்கி வைத்திருந்ததாகவும், மேற்படி பணத்தை யாரிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ள என்ற விபரத்தினை தான் ஒரு வெள்ளை பேப்பரில் எழுதி இன்று 23.04.2022-ம் தேதி காலை சுமார் 07.50 மணியளவில் தனது Whats app-ன் மூலம் திரு.உமாசக்தி அவரது Whats app-க்கு அனுப்பிவைத்ததாகவும், இன்று காலை சுமார் 10.25 மணிக்கு இணை போக்குவரத்து ஆணையார் அவர்கள் அவரது தொலைபேசி எண் 99941-

07429-ல் இருந்து எனது செல்போன் எண் 6381773783-க்கு அழைத்து தான் வீட்டிற்கு வருவதாகவும், பணம் ரெடியா என்று கேட்டதாகவும், அதற்கு தான் பணம் ரெடியாக இருப்பதாக தெரிவித்தாகவும், அதன்படி சுமார் 10.45 மணியளவில் திரு.உமா சக்தி அவர்கள் தனது வீட்டிற்கு வந்து மேற்படி வசூல் செய்துவைத்திருந்த பணம் ரூ.27,35,000/-ஐ தன்னிடமிருந்து பெற்று அவர் கொண்டுவந்திருந்த பேக்கில் வைத்துக்கொண்டதாக தெரிவித்தார். மேலும் திரு.செல்வராஜ் வைத்திருந்த கருப்பு நிற VIVO Cell Phone-ஐ வாங்கி அவரது Whats app Message-களை பார்வையிட்டபோது, அதில் இன்று 23.04.2022-ம் தேதி காலை சுமார் 07.53 மணியளவில் JTC CBE என்று பெயரில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி எண்.99941-07429- க்குண்டான Whats app message-ஐ திறந்து பார்க்க அதில் இணை போக்குவரத்து ஆணையர் திரு.உமா சக்தி அவர்களின் புகைப்படத்துடன் கூடிய message இந்தது. அதில் Today என்பதற்கு கீழ் வெள்ளைத்தாளில் குறிப்பு எழுதப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்ட Photo திரு.செல்வராஜ் Whats app-ல் இருந்து திரு.உமா சக்தி Whats app-கணக்கிற்கு 07.53 மணிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மேற்படி Whats app message-ஐ திரு.செல்வ்ராஜிடம் காண்பித்து விசாரிக்க, அவர் இன்று காலை 07.53 மணிக்கு தனது Whats app-ல் இருந்து திரு.உமா சக்தி Whats app-ற்கு அனுப்பிவைக்கப்பட்டது தான் தான் என்று தெரிவித்தார். மேற்படி Whats app message-ஐ திரு.செல்வராஜ் என்பவரின் செல்போனில் open செய்து Screen Shot எடுத்து printout எடுக்கப்பட்டு அதில் திரு.செல்வராஜ் மற்றும் தெற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலர் திரு.பாலமுருகன் ஆகியோர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. மேலும் திரு.செல்வராஜ் வைத்திருந்த VIVO Cell Phone-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி விசாரணையின் போது திரு.உமா சக்தி அவர்களிடம் பணத்தை பற்றி விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக தெரிவித்தார். அவர் கொடுத்த விளக்கத்தை மேற்படி செல்போனில் அனுப்பப்பட்ட Whats app message மற்றும் ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.செல்வராஜ் கொடுத்த வாக்கு மூலத்தை ஒப்பிட்டு

பார்க்கும்போது அவரது விளக்கத்தை ஏற்றுக்கொள்ள இயலாததாக உள்ளது. மேற்படி பணம் ரூ.28,35,000/-ம் மூன்று மாவட்டத்தை சேர்ந்த RTO அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட மாமூல் பணம் என்பதும், இந்த பணத்தை ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.செல்வராஜ் மூலம் வசூல் செய்து வந்தது தெரியவருகிறது. மேலும் இந்த திடீர் தணிக்கையின் போது ஆகமொத்தம் பணம் ரூ.28,35,000/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையானது இன்று 23.04.2022-ம் தேதி 11.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு அன்றை தினம் 16.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் இந்த திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். இத்துடன் திடீர் தணிக்கையின்போது திரு.K.உமாசக்தி, இணைப்போக்குவரத்து ஆணையர், கோவை சரகம், கோயமுத்தூர் மற்றும் திரு.M.செல்வராஜ், அலுவலக உதவியாளர் (ஓய்வு), த/பெ.மாரியப்ப தேவர், எண்.17, கிருஷ்ணாநகர், ரேசன் கடை எதிரில், சௌரிபாளையம், கோயமுத்தூர் ஆகியோர்களிமிருந்து, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.28,35,000/-, ஆவணங்கள் மற்றும் வழக்கின் சொத்துக்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். மேலும் 1) திரு.K.உமா சக்தி, இணைப்போக்குவரத்து ஆணையர், கோவை சரகம், கோயமுத்தூர், 2) திரு.M.செல்வராஜ், அலுவலக உதவியாளர் (ஓய்வு), த/பெ.மாரியப்ப தேவர், எண்.17, கிருஷ்ணாநகர், ரேசன் கடை எதிரில், சௌரிபாளையம், கோயமுத்தூர் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (Sd.xxxxx) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்/வட்டாட்சியர், கோயம்புத்தூர். இணைப்பு:- 1).நடவடிக்கை குறிப்புகள், 2).கைப்பற்றப்பட்ட பணம் ரூ.28,35,000/-, 3).கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் வழக்கின் சொத்துக்கள், 4).பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள். Madam, Received the complaint along with proceedings, Cash Rs.28,35,000/-, Documents, case Properties, Statements of the accused dated on 23.04.2022 at about 16.40 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.07/2022/AC/CB u/s. 7, 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 (Sd.xxxxx) M.P.Dhivya, (23.04.2022) Addl.Supdt. of Police, VAC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட

துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

(M.P.திவ்யா)
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.